**செய்தி வெளியீடு எண்: 267** **நாள்: 18.04.2018**

## செய்தி வெளியீடு

## பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் பிரஸ்ஸல்ஸ் தலைநகர மண்டலத்தின் இடையே கூட்டு ஒப்பந்தம்

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் முன்னிலையில், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக சிறப்பு அலுவலர்/ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களும், பிரஸ்ஸல்ஸ் தலைநகர மண்டலத்தின் சார்பாக அம்மாநில செயலாளர் மேதகு.பியான்கா டிபேட்ஸ் அவர்களும் இன்று (18.04.2018) தலைமைச் செயலகத்தில் நட்புறவு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டனர்.

இந்திய குடியரசு மற்றும் பெல்ஜியம் நாட்டின் இடையே பாரம்பரிய முறையில் நட்புறவு மூலம் வழிகாட்டவும், இரண்டு பெருநகரங்களுக்கு இடையிலான உறவுகளை வளர்த்துக் கொள்ளவும், ஜனநாயகம், மனித நேயம், மனித உரிமைகள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகிய பொதுவான இலக்குகள் மற்றும் மதிப்புகள் குறித்தும், இரண்டு நாடுகளிலுள்ள மக்களின் பழமையான மற்றும் மதிப்புமிக்க மரபு பற்றிய விழிப்புணர்வு மேம்படவும், மேலும் இரண்டு மாநகரங்கள் எதிர்கொள்ளும் தற்போதைய நகர்ப்புற சவால்களை பற்றிய விழிப்புணர்வும், சிறந்த நடைமுறைகளை பகிர்ந்தும் மற்றும் பொதுவான வளர்ச்சித் திட்டங்களை நிறுவுவதன் மூலம் ஒருவருக்குகொருவர் அடையும் நன்மைகளை அங்கீகரிப்பதற்கும் இரு நகரங்களுக்கிடையே ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

இவ்வொப்பந்தத்தில் இரு நாடுகளின் சட்டத்திற்குட்பட்ட சமத்துவம் கொள்கை அடிப்படையில், பின்வரும் பகுதிகளில் இரு நாட்டவரும் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பை ஊக்குவிக்கும் வகையில் நகர வளர்ச்சி மற்றும் நகர்ப்புற சவால்கள், நிலையான மற்றும் உள்ளடக்கிய பொருளாதார மேம்பாடு, சீர்மிகு நகரங்கள், புவி வெப்பமடைதல் மற்றும் பருவநிலை மாற்றத்திற்கு ஏற்ப உள்ளூர் சமூகங்களை ஆதரிப்பது, அவசர காலத்தின் போது எதிர்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை வலுப்படுத்துவது, பெருநிறுவன சமூக பொறுப்பு மற்றும் சமூகத்தின் பாதிக்கப்படக்கூடிய குழுக்கள் அல்லது வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள குழுக்கள் ஆகியவற்றை ஒருங்கிணைப்பது, பெண்கள் அதிகாரம், ஆண் / பெண் சமத்துவம், நகர்ப்புற சூழலில் குழந்தைகளின் உரிமைகள் ஆகியவை உள்ளடங்கும்.

தகவல் தொழில்நுட்பம், நிர்வாகத் திறன் பரிமாற்றம் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவற்றில் புரிந்துணர்வு ஏற்படவும் மற்றும் மேற்கூறிய பொதுவான வளர்ச்சித் திட்டங்களுக்காகவும் இவ்வொப்பந்தம் கையொப்பமிடப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலர் திரு.ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., பெல்ஜியம் நாட்டின் இந்திய தூதர் திரு.ஜேன் லுயிக்ஸ், பெல்ஜியம் நாட்டின் தென்னிந்தியாவிற்கான பொது தூதர் திரு.மார்க் வான்டி ரெக்கன், துணை ஆணையாளர் (சுகாதாரம்) திரு.பி.மதுசுதன் ரெட்டி, இ.ஆ.ப., தலைமைப் பொறியாளர் (கட்டிடம்) திரு.என்.மகேசன், மேற்பார்வை பொறியாளர் (தி.க.மே.து) திரு.எஸ்.சக்தி மணிகண்டன், பிரஸ்ஸல்ஸ் பிராந்திய பொது

சேவைக்கான பொதுச் செயலாளர் திரு.கிறிஸ்டியன் லெமோலின் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**